**டிசம்பர் – 22**

# TNPSC துளிகள்

- இந்திய விமானப்படையானது, ரஷ்யக் கூட்டமைப்பு விண்வெளிப் படையுடன் (RFASF) AviaIndra-2025 பயிற்சி எனும் கூட்டுப் பயிற்சியை நடத்துகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மல்லாங்கிணற்றில் இடை பழங்காலத் தளம்




- தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள மல்லாங்கிணற்றில் குவார்ட்ஸ் கல் கருவிகள் கண்டெடுக்கப்பட்ட பிறகு, அங்கு இடைப் பழங்கற்காலத் தளம் இருக்கலாம் என அடையாளம் காணப்பட்டது.
- இங்கு கண்டெடுக்கப்பட்ட கலைப்பொருட்களில் பல் பரிமாண செதுக்குக் கல்கள், உள் நோக்கு செதுக்குக் கல்கள், கல் சீவல்கள், பிளவுகள் மற்றும் சீவுளிகள் ஆகியவை அடங்கும்.
- மல்லாங்கிணற்றில் உள்ள ஒரு நீர்நிலைக்கு அருகிலுள்ள அடுக்கு நிலைக் குவாரிப் பிரிவில் இந்தக் கல் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன.
- இந்தக் கருவிகள் ஆனது, இடைப் பழங்கற் காலத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று முதற்கட்ட பகுப்பாய்வு சுட்டிக்காட்டுகிறது.
- இந்தத் தளமானது, கீழ் நிலை குண்டாறு படுகையின் ஒரு பகுதியாகும் என்பதோடு மேலும் வண்டல் படிவு (நதி தொடர்பான) செயல்பாடு காரணமாக உருவாக்கப்பட்டது.

## தமிழ்நாடு வாக்காளர் பட்டியல் 2025


- சிறப்புத் தீவிர திருத்தத்திற்குப் பிறகு (SIR) தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து 97 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.

- திருத்தத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6.41 கோடியிலிருந்து 5.43 கோடியாகக் குறைந்தது.
- நீக்கப்பட்ட வாக்காளர்களில், 26.9 லட்சம் பேர் உயிரிழந்தனர், 66.4 லட்சம் பேர் தங்கள் இருப்பிடத்தை மாற்றினர் அல்லது வாக்காளர் பட்டியலில் இல்லை என்பதோடு, 3.98 லட்சம் பேர் போலிப் பதிவுகள் ஆகும்.
- சென்னை மாவட்டத்தில், 14.2 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டனர் என்பதோடு இது SIR திருத்தத்திற்கு முன்பு இருந்த வாக்காளர்களில் சுமார் 35.6% ஆகும்.




# தேசியச் செய்திகள்

## உயிரி ஆற்றல் திறன் வளர்ச்சி 2025





- கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா 2,362 மெகாவாட் உயிரி ஆற்றல் சார் மின்சாரத்தையும், கழிவிலிருந்து ஆற்றல் மூலம் 228 மெகாவாட் அளவிலான திறனையும் சேர்த்தது.
- இந்தக் காலக் கட்டத்தில் நாடு முழுவதும் சுமார் 2.88 லட்சம் உயிரி எரிவாயு ஆலைகள் நிறுவப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாத நிலவரப்படி இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட உயிரி ஆற்றல் உற்பத்தித் திறன் 11.6 ஜிகாவாட்டாக எட்டியுள்ளது.
- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ஆனது, தேசிய உயிரி ஆற்றல்

திட்டத்தின் (NBP) (2021–22 முதல் 2025–26 வரை) கீழ் உயிரி ஆற்றல் திட்டங்களை ஆதரிக்கிறது.

- கிராமப்புறங்களில் இருந்து பெறப்படும் உபரி உயிரி எரிசக்தியை மின் உற்பத்திக்கு பயன்படுத்துவதையும் கிராமப்புற வீடுகளுக்கு கூடுதல் வருமானத்தை வழங்குவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயிரி ஆற்றல் என்பது தாவரங்கள் மற்றும் கழிவுகள் போன்ற கரிமப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஆற்றலாகும் என்பதோடு, மேலும் இது இந்தியாவில் தூய்மையான மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளர்ச்சியை ஆதரிக்கிறது.

## கிரேட் நிக்கோபார் தீவு மேம்பாட்டுத் திட்டம்




- அந்தமான் மற்றும் நிக்கோபார் நிர்வாகம் ஆனது கிரேட் நிக்கோபார் தீவு மேம்பாட்டுப் பகுதியை அறிவித்துள்ளது.
- இந்த அறிவிப்பு ஆனது, கிரேட் நிக்கோபார் தீவின் மேம்பாட்டிற்கான ஒரு மாபெரும் திட்டத்தினை தயாரிக்க அனுமதிக்கிறது.
- மேம்பாட்டுப் பகுதியில் மொத்தம் 44.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவை உள்ளடக்கிய ஏழு வருவாய் கிராமங்கள் உள்ளன.
- இந்தப் பகுதியில், 8.88 சதுர கிலோமீட்டர்கள் பரப்பானது வன நிலமாக கருதப்படும் பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- கிரேட் நிக்கோபார் தீவிற்கான பெருந்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட மொத்தப் பரப்பளவு 166.10 சதுர கிலோமீட்டர் ஆகும்.
- இந்த மேம்பாட்டுத் திட்டம் கிரேட் நிக்கோபார் பகுதியின் முழுமையான மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## 1600-தொடர் ஏற்பு

- இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, இந்தியக்

காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) மூலம் ஒழுங்கு படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு சேவை மற்றும் பரிவர்த்தனை அழைப்புகளுக்கு 1600-தொடர் தொலைபேசி எண்களைப் பயன்படுத்த உத்தரவிட்டுள்ளது.

- 1600-தொடர் எண்களை ஏற்றுக் கொள்வதற்கான காலக்கெடு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி ஆகும்.
- வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டு (BFSI) துறையில் உள்ள நிறுவனங்களால் பயன்படுத்த 1600-தொடர் தொலைபேசி எண்களை தொலைத்தொடர்புத் துறை (DoT) ஒதுக்கியுள்ளது.
- 1600-தொடர் ஆனது, நுகர்வோர் உண்மையான/முறையான அழைப்புகளை அடையாளம் காண உதவுகிறது என்பதோடு மோசடி மற்றும் தேவையற்ற/ஸ்பேம் அபாயத்தைக் குறைக்கிறது.
- இந்த ஆணையானது, RBI, SEBI மற்றும் ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) ஆகியவற்றால் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட இதே போன்ற விதிகளைப் பின்பற்றுகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### பாரம்பரிய மருத்துவம் குறித்த WHO உலகளாவிய உச்சி மாநாடு

- பாரம்பரிய மருத்துவம் குறித்த இரண்டாவது உலக சுகாதார அமைப்பின் (WHO) உலகளாவிய உச்சி மாநாடு இந்தியாவின் புது டெல்லியில் நடைபெறுகிறது.
- இது WHO மற்றும் இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தால் இணைந்து நடத்தப் படுகிறது.
- பாரம்பரிய மருத்துவம் மூலம் மக்களுக்கும் கிரகத்திற்கும் சமநிலையை மீட்டெடுக்க ஓர் உலகளாவிய இயக்கத்தை முன்னெடுப்பதை இந்த உச்சி மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த நிகழ்வு "Restoring balance: The science and practice of health and well-being" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப்படுகிறது.
- WHO அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ உத்தி 2025–2034 என்ற உத்தியின் மூலம் வழி நடத்தப்படும் இது, பாரம்பரிய மருத்துவத்தைச் சுகாதார அமைப்புகளில் பாதுகாப்பான முறையில், ஆதார அடிப்படையில் மற்றும் நிலையான வகையில் ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்துகிறது.

- இந்த உச்சி மாநாட்டில் 1.5 மில்லியன் அறிவியல் அறிக்கை வெளியீடுகள் மற்றும் வளங்களைக் கொண்ட டிஜிட்டல் களஞ்சியமான WHO பாரம்பரிய மருத்துவ உலகளாவிய நூலகம் தொடங்கப்பட்டது.




## விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (CEPA)




- இந்தியா மற்றும் ஓமன் ஆகிய நாடுகள் மஸ்கட்டில் விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தில் (CEPA) கையெழுத்திட்டன.

- இந்தியாவின் ஏற்றுமதியில் 99.38 சதவீதத்தினை உள்ளடக்கிய 98.08% கட்டண பிரிவுகளுக்கு ஓமன் வரியில்லா அணுகலை வழங்கும்.
- இந்தியா ஓமனில் இருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதியில் 94.81 சதவீதத்தினை உள்ளடக்கிய அதன் கட்டணப் பிரிவுகளில் 77.79% பொருட்கள் மீதான வரிகளைக் குறைக்கும்.
- CEPA ஆனது திறமையான நிபுணர்களுக்கு எளிதான போக்குவரத்தினை அனுமதிக்கிறது (முறை-4) மற்றும் ஒப்பந்த சேவை வழங்குநர்களுக்கான தங்கும் வசதியை 90 நாட்களில் இருந்து 2 ஆண்டுகளாக நீட்டிக்கிறது.
- 2024–25 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகம்: இந்தியா பெரும்பாலும் எரிசக்தி மற்றும் உரப் பொருட்களில் 4.06 பில்லியன் டாலர் மதிப்பில் ஏற்றுமதி மற்றும் 6.5 பில்லியன் டாலர் மதிப்பில் இறக்குமதி செய்தது.

## அத்வா வெற்றி நினைவுச்சின்னம் – எத்தியோப்பியா




- பிரதமர் நரேந்திர மோடி எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவில் உள்ள அத்வா வெற்றி நினைவுச்சின்னத்திற்கு மரியாதை செலுத்தினார்.
- 1896 ஆம் ஆண்டில் அத்வா போரில் இத்தாலியப் படைகளை எத்தியோப்பியா வென்றதை நினைவு கூரும் வகையில் இந்த நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.
- பிரதமர் மோடி தனது பயணத்தின் போது எத்தியோப்பியா நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்திலும் உரையாற்றினார்.
- அவருக்கு எத்தியோப்பியாவின் மிக உயரிய குடிமகன் விருதான நிஷான் ஆஃப் எத்தியோப்பியா வழங்கப்பட்டது.

## COP17 முத்திரைச் சின்னம்

- உயிரியல் பன்முகத் தன்மை தொடர்பான உடன்படிக்கையின் (CBD) 17வது பங்கு தாரர்கள் மாநாட்டின் அதிகாரப்பூர்வ முத்திரைச் சின்னத்தினை ஆர்மேனியா வெளியிட்டுள்ளது.
- இந்த முத்திரைச் சின்னத்தில், ஆர்மேனியாவினைச் சேர்ந்த ஒரு வண்ணத்துப் பூச்சி இனமான எரிவன் அனோமலஸ் ப்ளூ (பாலியோமாட்டஸ் எரிவானென்சிஸ்) இடம் பெற்றுள்ளது.
- இது ஆர்மேனியாவின் செந்நிறப் புத்தகத்தில் (2010) அருகி வரும் இனமாக பட்டியலிடப்

பட்டுள்ளது, ஆனால் உலகளாவிய அல்லது ஐரோப்பிய IUCN செந்நிறப் பட்டியல்களில் சேர்க்கப்படவில்லை.

- COP17 ஆனது 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆர்மேனியாவின் யெரெவனில் "Taking action for nature" என்ற கருத்துருவின் கீழ் நடத்தப்படும்.
- குன்மிங்-மாண்ட்ரியல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பின் 23 பல்லுயிர்ப் பெருக்க இலக்குகள் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதைக் குறிப்பதற்காக என இந்த முத்திரைச் சின்னம் 23 கலப்பு வண்ணங்களைப் பயன்படுத்துகிறது.





## பொருளாதாரச் செய்திகள்

### RRB வங்கிகளுக்கான பொதுவான முத்திரைச் சின்னம்


- "ஒரு RRB, ஒரு முத்திரைச் சின்னம்" முன்னெடுப்பின் கீழ் இந்திய அரசும் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி ஆகியவை 28 பிராந்தியக் கிராமப்புற வங்கிகளுக்கும் (RRB) ஒரே பொதுவான முத்திரைச் சின்னத்தினை அறிமுகப்படுத்தின.
- முத்திரைச் சின்னத்தில் வளர்ச்சியைக் குறிக்கும் மேல்நோக்கிய அம்பு, ஆதரவினைக் குறிக்கும் கைகள் மற்றும் அறிவு மற்றும் அதிகாரமளிப்பைக் குறிக்கும் ஒரு சுடர் ஆகியவை உள்ளன.
- இதில் பயன்படுத்தப்பட்ட நிறங்கள் அடர் நீலம் (நம்பிக்கை மற்றும் நிலைத்தன்மை) மற்றும் பச்சை (வேளாண்மை, வாழ்க்கை மற்றும் வளர்ச்சி) ஆகியனவாகும்.
- RRB வங்கிகள் ஆனது கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புறப் பகுதிகளில் கடன் மற்றும் வங்கிச் சேவைகளை வழங்கும் சிறப்பு வங்கிகள் ஆகும்.
- 1976 ஆம் ஆண்டு பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் சட்டத்தின் கீழ் 1975 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட RRB வங்கிகள், மத்திய அரசு (50%), மாநில அரசு (15%) மற்றும் நிதி ஆதரவு வங்கி (35%) ஆகியவற்றுக்குச் சொந்தமானவையாகும்.

❖ RRB வங்கிகள் சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், சுய உதவிக் குழுக்கள், MSME நிறுவனங்களை ஆதரிக்கின்றன, மேலும் இவை நிதி உள்ளடக்கம் மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான முக்கிய கருவிகளாகச் செயல்படுகின்றன.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## $RuO_2$ கூறில் மாற்றுக் காந்தத் தன்மை





❖ ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் ருத்தேனியம் டை ஆக்சைடை ஒரு மாற்றுக் காந்தமாக சோதனை ரீதியாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

- மாற்றுக் காந்தம் என்பது அயக் காந்தங்கள் மற்றும் எதிர் அயக் காந்தங்களிலிருந்து வேறுபட்ட மூன்றாவது அடிப்படை காந்த வகுப்பாகும்.
- ருத்தேனியம் டை ஆக்சைடு ($RuO_2$) மெல்லிய படலங்கள் உண்மையான மாற்று காந்தத் தன்மையைக் கொண்டுள்ளது என்பது சோதனை ரீதியாக நிரூபிக்கப் பட்டு உள்ளன.
- இது $RuO_2$ மெல்லிய படலங்களைப் பயன்படுத்தி அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான அதிவேக, மிகவும் அதிக அடர்த்தி கொண்ட காந்தத் தன்மை கொண்ட நினைவகச் சாதனங்களை உருவாக்க உதவும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## வருடாந்திர இந்தியக் கல்வி அறிக்கை 2025





- யுனெஸ்கோ அமைப்பானது, ஏழாவது "Bhasha Matters: State of the Education Report for India 2025" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.
- இது பள்ளிக் கல்வியில் தாய்மொழி அடிப்படையிலான பன்மொழிக் கல்வி (MTB-MLE) மீது கவனம் செலுத்துகிறது.
- இந்த அறிக்கை தெளிவான மாநில அளவிலான மொழிக் கொள்கைகள் மற்றும் பன்மொழி கற்பிப்பதற்கான சிறந்த ஆசிரியர் பயிற்சி உள்ளிட்ட பத்து முக்கிய பரிந்துரைகளை வழங்குகிறது.
- தாய்மொழிக் கல்விக்கான ஒருங்கிணைப்பு மற்றும் ஆதரவை மேம்படுத்துவதற்கான ஒரு தேசிய திட்டத்தினை உருவாக்க இது பரிந்துரைக்கிறது.
- தாய்மொழியில் கற்றல் ஆனது உள்ளடக்கம், கற்றல் விளைவுகள் மற்றும் மொழிகளைப் பாதுகாப்பதை மேம்படுத்துகிறது என்று அறிக்கை கூறுகிறது.

## முறைசாரா துறையில் பெண்களின் பாதுகாப்பு குறித்த அறிக்கை

- பெண்கள் அதிகாரமளிப்பதற்கான பாராளுமன்றக் குழு, "முறைசாரா துறையில் பெண்களின் காப்பு மற்றும் பாதுகாப்பு" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.
- கட்டுமானத் தொழிலாளர்கள், பீடி தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் மற்றும் இணையவழித் தொழிலாளர்களாக பணி புரியும் பெண்களை இந்த அறிக்கை உள்ளடக்கியது.
- புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்கள் பெரும்பாலும் பதிவு செய்யப்படாமலும்,

தொழிலாளர் சட்டங்களின் கீழ் சரியான பாதுகாப்பு இல்லாதவர்களாகவும் உள்ளனர் என்று அது கூறுகிறது.


- சில பிராந்தியங்களில் பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் (PM-SYM) திட்டத்தில் பெண் தொழிலாளர்களின் சேர்க்கை குறைவாக இருப்பதாக அறிக்கை கண்டறிந்து உள்ளது.
- 2013 ஆம் ஆண்டு பணியிடத்தில் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் சட்டத்தின் கீழ் உள்ள பல உள்ளூர் குழுக்கள் முழுமையாகச் செயல்படவில்லை அல்லது நன்கு அறியப் படவில்லை என்பதை அது குறிப்பிடுகிறது.
- சக்தி திட்டத்தில் உள்ள பால்னா திட்டத்தின் கீழ், 6.24% நிதி மட்டுமே பயன்படுத்தப் பட்டது மற்றும் அங்கீகரிக்கப்பட்ட 14,599 அங்கன்வாடி மற்றும் பகல் நேரக் குழந்தைப் பராமரிப்பு மையங்களில் 2,425 மையங்கள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன.




## நிதி ஆயோக் அறிக்கை 2025

- இந்தியாவில் உள்ள பொது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்கள் குறித்த அறிக்கையை நிதி ஆயோக் வெளியிட்டது.
- இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான மொத்த செலவு (GERD) 2020–21 ஆம் ஆண்டில் சுமார் 2 லட்சம் கோடி ரூபாயை எட்டியது, இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) சுமார் 0.6% முதல் 0.7% வரை ஆகும்.
- இந்தியாவின் மொத்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினத்தில் அரசுத் துறை 63.6% பங்களிக்கிறது.
- வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் பொது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினத்தில் 51% பங்களிக்கின்றன, அதைத் தொடர்ந்து சுகாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு ஆகிய துறைகள் பங்களிக்கின்றன.


- பொது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களில் சுமார் 36% தென்னிந்தியாவில் அமைந்துள்ளன, அதே நேரத்தில் வடகிழக்குப் பிராந்தியத்தில் 1.8% மட்டுமே உள்ளன.
- மத்திய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களில் கிட்டத்தட்ட 48% ஆனது நாட்டின் அதிக மக்கள் தொகை கொண்ட பத்து நகரங்களில் அமைந்துள்ளன.



Impacts of R&D Investments

## மாநிலச் செய்திகள்

### இணைய வழியில் தொழிலாளர்கள் மசோதா 2025 – ஜார்க்கண்ட்





- ஜார்க்கண்ட் தள அடிப்படையிலான இணைய வழித் தொழிலாளர்கள் (பதிவு மற்றும் நலன்புரி) மசோதா, 2025 ஆனது மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தச் சட்டம் ஆனது இணையம் மற்றும் இணைய தளம் அடிப்படையிலான தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பை வழங்குகிறது.
- இது டிஜிட்டல் தளங்கள் மற்றும் விநியோகம், போக்குவரத்து மற்றும் தேவைக்கேற்ப

வழங்கப்படும் சேவைகள் போன்ற துறைகளில் சேவை திரட்டு நிறுவனங்கள் மூலம் ஈடுபடும் தொழிலாளர்களுக்குப் பொருந்தும்.

- தொழிலாளர்களைப் பதிவு செய்யவும், அடையாள அட்டைகளை வழங்கவும், நலத் திட்டங்களை மேற்பார்வையிடவும் ஒரு இணையவழித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப் படும்.
- இந்தச் சட்டம் குறைந்தபட்ச ஊதியங்கள் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சலுகைகளை கட்டாயமாக்குகிறது என்பதோடு மேலும் அதன் விதிகளை மீறும் நிறுவனங்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

## அருமண் தனிம வழித்தடம்




- ஆந்திரப் பிரதேசம் ஆனது, அதன் கடற்கரையோரத்தில் நீண்ட தொடர்ச்சியான அருமண் தனிமக் கூறுகள் (REE) நிறைந்த கடற்கரை மணல் படிவுகளைக் கொண்டு உள்ளது.
- ஸ்ரீகாகுளத்திலிருந்து நெல்லூர் வரை 974 கி.மீ நீளமுள்ள இந்த வழித் தடம், பீமுனிபட்டணம், கலிங்கப்பட்டினம், காக்கிநாடா, நர்சாபூர், மச்சிலிப்பட்டினம், சிராலா, வோடரேவு, இராமாயப்பட்டினம் மற்றும் துகராஜப்பட்டினம் உள்ளிட்ட முக்கிய தளங்களைக் கொண்டுள்ளது.
- இந்தப் பதிவுகளில் மோனாசைட்டில் நிறைந்துள்ளன என்பதோடு இதில் 55–60% அருமண் ஆக்சைடுகள் மற்றும் 8–10% தோரியம் உள்ளன.
- இந்தியாவின் மோனாசைட் இருப்புக்களில் 30–35% இந்த மாநிலத்தில் உள்ளது மற்றும் நியோடைமியம், பிரசோடைமியம், லாந்தனம் மற்றும் சீரியம் போன்ற லேசான அரு மண் கூறுகளைக் கொண்டுள்ளது.
- உள்கட்டமைப்பில் கூடூரில் உள்ள இந்திய அருமண் தனிம லிமிடெட் (IREL) செயலாக்க ஆலை மற்றும் கடற்கரை மணல் பிரிப்பு அலகுகள் அடங்கும்.

# இதரச் செய்திகள்

## வரலாற்றுக்கு முந்தைய டைனோசர் கால்தடங்கள்


- சுமார் 210 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய ஆயிரக்கணக்கான டைனோசர் கால் தடங்கள் வடக்கு இத்தாலியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- வல்லுநர்கள் இந்தத் தடங்கள் ஆனது, பிற்கால ட்ரயாசிக் காலத்தைச் சேர்ந்த நீண்ட

கழுத்து கொண்ட டைனோசர்களான புரோசாரோபாட்களினுடையது என்று அடையாளம் கண்டுள்ளனர்.

- ❖ கால்தட வடிவங்கள், கூட்டமான நடமாட்டம் மற்றும் இளம் டைனோசர்களைப் பாதுகாப்பதற்கான சாத்தியமான தற்காப்பு நடத்தையைக் குறிக்கின்றன.
- ❖ இந்தப் பாதைகள் ஆனது டைனோசர்களின் நடமாட்டம், தொடர்பு மற்றும் இடம் பெயர்வு ஆகியவற்றை வெளிப்படுத்துவதால், இந்தத் தளம் அறிவியல் ரீதியாக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.




## குனார் நதி நீர் பிரச்சினை




- ❖ குனார் நதியிலிருந்து நங்கர்ஹார் மாகாணத்தில் உள்ள தருண்டா அணைக்கு

தண்ணீரைத் திருப்பி விடும் திட்டத்தை ஆப்கானிஸ்தான் அங்கீகரித்துள்ளது.

- ❖ குனார் நதி பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வாவின் சித்ரால் மாவட்டத்தில் உருவாகி, பாகிஸ்தானுக்குள் மீண்டும் நுழைவதற்கு முன்பு ஆப்கானிஸ்தானில் பாய்கிறது.
- ❖ இந்த நதியானது இறுதியாக பாகிஸ்தானின் பஞ்சாபில் உள்ள அட்டாக் அருகே சிந்து நதியுடன் இணைகிறது.
- ❖ இந்தத் திசைதிருப்பல் திட்டம் பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா பகுதிக்கான கீழ் மட்ட நீர் ஓட்டத்தைக் குறைக்கலாம்.
- ❖ குறைக்கப்பட்ட நதி ஓட்டம் பாகிஸ்தானில் பாசனம், குடிநீர் வழங்கல் மற்றும் நீர் மின் உற்பத்தியை பாதிக்கும்.
- ❖ குனார் நதி மீது ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே முறையான நீர்ப் பகிர்வு ஒப்பந்தம் எதுவும் இல்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★